மானாமதுரை நகராட்சி

மானாமதுரை நகராட்சியில் அவசரக்கூட்டம் 21.10.2022ந் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.30 மணிக்கு நகர்மன்றத்தலைவர் மானாமதுரை நகராட்சி அவர்கன் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| பொருள் 1 | தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2022 ன்படி, வார்டு குழு மற்றும் பகுதி சபா குழுக்கள் அமைத்தல் தொடர்பாக தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 303 ன் கீழ் உருவாக்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 மற்றும் மேற்கூறிய குழுக்களுக்கு செயலாளர்கள் தேர்ந்தெடுத்தல் மற்றும் அவர்களின் பொறுப்புகள் மற்றும் பணிகள் குறித்த அரசாணை (நிலை) எண் 93 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><br>அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள் 24.06.2022 ன்படி வார்டு கமிட்டி அமைத்தல் மற்றும் பகுதி சபா குழு அமைத்தல் தொடர்பாக ஒவ்வொரு வார்டு மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களை தலைவராக கொண்டு வார்டு குழு அமைத்தல் மற்றும் பகுதி சபா குழு உறுப்பினராக வார்டு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து குழு அமைப்பதற்கு ஒவ்வொரு வார்டிலும் உள்ள தெருக்கள் வாரியாக நான்கு பகுதி சபா அமைத்து அரசாணையின்படி, மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அரசாணையின்படி பகுதி சபா குழு உறுப்பினராக நியமனம் செய்யப்படும் நபர்களிடமிருந்து படிவம் 1ல் மேற்படி நபர்களின் விருப்பத்தினை பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண் 95<br>அனுமதி<br>வழங்கப்பட்டது. |
| பொருள்2 | அரசாணை (நிலை) எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( தேர்தல்) துறை நாள் 24.06.2022 ன்படி மானாமதுரை நகரப்பகுதிகளில் ஒரு வார்டிற்கு 4 பகுதி சபா உறுப்பினர் வீதம் 27 வார்டிற்கும் பகுதி சபா உறுப்பினர்கள் நியமனம் செய்யவும், மேலும் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. அதனடிப்படையில் உரிய பணி செய்வதற்கும் மற்றும் வரைப்படம் தயார் செய்வதற்கும் உரிய செலவுகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்ய அனுமதிக்கலாம்.<br>2. மேற்கொள்ளும் பணிக்குரிய செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு | தீர்மான எண் 96<br>அனுமதி<br>வழங்கப்பட்டது. |

<table>
<tr><td></td><td>மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>பொருள் 3</td><td>மாண்புமிகு நகர்புற வளர்ச்சித்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு அவர்களால் 2021–2022 ம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற பேரவை கூட்டத்தொடரில் 24.08.2021 ம் தேதியில் நகராட்சிகளில் உள்ள தெருமின்விளக்குகளை ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக ( Light Emission Diode Lamps) மாற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி, மானாமதுரை நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள தெருமின்விளக்குகளை ஒளி உமிழ்வு டையோடு விளக்குகளாக ( Light Emission Diode Lamps) மாற்றுவதற்கு ரூ 87.45 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் விபரம் பின்வருமாறு
<table>
<tr><th>Sl no</th><th>Name of Work</th><th>Estimate Amount Rs in Lakhs</th></tr>
<tr><td>1</td><td>Conversion of Existing street light lamps into Energy Saving LED ( Light Emission Diode) Lamps at Municipal Limit Streets</td><td>87.45</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியில் ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் அவசர அவசியம் கருதியும், காலதாமத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று நிர்வாக அனுமதி பெற்றிட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பித்திட நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண் 97<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>பொருள் 4</td><td>மானாமதுரை நகராட்சியில் பொதுநிதி 2022-2023 ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் பேவர்பிளாக் சாலை அமைப்பதற்கு ரூ 39.00 இலட்சத்தில் நகராட்சி பொறியாளர் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலக குறிப்பு<br>இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்</td><td>தீர்மான எண் 98<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
</table>

(ஒம்)சோ.மாரியப்பன் கென்னடி
நகர்மன்றத்தலைவர்
மானாமதுரை நகராட்சி